**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**&**

**இந்தி யவானிலைத் துறை**

**தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை**

**அரியலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

**(16.10.2024 முதல் 20.10.2024)**

**அறிக்கைஎண் 57/2024** **தேதி. 15.10.2024**

**அரியலூர் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை**

அரியலூர் மாவட்டத்தின் 10.10.24 முதல் 14.10.24 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 32 - 34 °செ ஆகவும் இரவு நேர வெப்பநிலை 23 - 25 °செ ஆகவும் காலை நேரகாற்றின் ஈரப்பதம் 96 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 95 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 6 - 12 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் வட வட கிழக்கு திசை வரை பதிவானது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை அரியலூர் (16.10.2024 முதல் 20.10.2024)**

| கடந்த வார வானிலை (10.10.2024 முதல் 14.10.2024) | | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 20.10.2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 10/10 | நாள்-2 11/10 | நாள்-3 12/10 | நாள்-4 13/10 | நாள்-5 14/10 | தேதி | நாள்-1 16/10 | நாள்-2 17/10 | நாள்-3 18/10 | நாள்-4 19/10 | நாள்-5 20/10 |
| 1.9 | 1.2 | 0.6 | 29.7 | 4.0 | மழை (மி.மீ) | 37 | 48 | 24 | 4 | 6 |
| 33 | 34 | 33 | 32 | 32 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 28 | 26 | 25 | 24 | 23 |
| 25 | 25 | 24 | 23 | 24 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 23 | 22 | 21 | 21 | 20 |
| 7 | 6 | 7 | 8 | 8 | மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 8 | 8 |
| 90 | 89 | 95 | 92 | 96 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 90 | 80 | 80 | 90 |
| 95 | 73 | 81 | 93 | 95 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 80 | 50 | 50 | 60 | 60 |
| 10 | 6 | 17 | 6 | 12 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 10 | 12 | 12 | 8 | 10 |
| கிழக்கு | கிழக்கு தென் கிழக்கு | வட வட கிழக்கு | வட வட கிழக்கு | மேற்கு வட மேற்கு | காற்றுவீசும் திசை | மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தெற்கு | தெற்கு |

**அரியலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். 16.10.2024 முதல் 20.10.2024 ஆகிய தினங்களுக்கு இலேசானது முதல் கன மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 23 - 28 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 20 - 23 °செ ஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 8 - 12 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரைகள்**

| | |
|---|---|
| பொது | வரும் நாட்களில் இலேசானது முதல் கன மழை எதிர்பார்க்கப்படுவதால் வயல்களில் முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும் |
| | வடிகால் வாய்க்கால்களை தூர்வாரவும். |

| | | |
|---|---|---|
| | | வடிகால் வாய்க்கால்களை பண்ணை குட்டையுடன் முறையாக இணைத்து மழை நீரை எளிதாக வடிப்பதுடன் மழை நீரை சேமிக்கவும் முடியும். |
| | | பயிர்களுக்கு உரம் இடுவது மற்றும் பூச்சி மருந்து தெளிப்பதைத் தவிர்க்கவும் |
| | | பண்ணை கருவிகள், இயந்திரங்கள், மின் கலன்கள் போன்றவற்றை தண்ணீர் தேங்காத இடங்களில் பாதுகாப்பாக வைக்கவும். |
| நெல் | நடவு வயல் | வரும் நாட்களில் இலேசானது முதல் கனமழை எதிர்பார்க்கப்படுவதால் நெற்பயிர் நடவு செய்த வயல்களில் தேவைக்கு அதிகமான நீரை முறையாக வடித்து பயிரை பாதுகாக்கவும். உரம் மற்றும் களைக் கொல்லி இடுதல், பூச்சி மருந்து தெளித்தல் ஆகியவற்றை தவிர்க்கவும். |
| நெல் | நாற்றாங்கால் | வரும் நாட்களில் மிதமானது முதல் கனமழை பெய்யும் என்பதால் நாற்றாங்காளுக்கு முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும். தாளடி விதைப்பு செய்யும் விவசாயிகள் விதைப்பை 2 முதல் 3 நாட்களுக்கு தவிர்க்கவும். |
| வாழை | | வாழை மரங்கள் காற்று மற்றும் மழையால் சாயாமல் இருக்க, வாழை மரங்களுக்கு முட்டுக்கொடுத்து பாதுகாக்கவும். |
| கரும்பு | | காற்று மற்றும் மழையால் கரும்பு பயிர் சாயாமல் இருக்க விட்டம் கட்டி மண் அணைக்கவும் |
| கால்நடைகள் | மாடு மற்றும் ஆடு | எதிர்பார்க்கப்படும் மழையால் கன்றுகள் மற்றும் ஆட்டுகுட்டிகளுக்கு சளி போன்ற உபாதைகள் ஏற்பட்டு நுரையீரல் அழற்ச்சி ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே மழை சாரல் படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். |
| | | தற்போது நிலவும் வானிலையின் காரணமாக கால்நடை தொழுவத்திலும் அதன் சுற்றியுள்ள பகுதிகளிலும் தண்ணீர் தேங்குவதை தவிர்த்து வடிகால் வசதி ஏற்படுத்தவும். தீவன பொருட்களை மழை நீரில் நனையாமல் பாதுகாக்கவும். வெளிப்புற ஒட்டுண்ணிகளை தவிர்க்க தேங்கி நிர்க்கும் மழை நீரை கால்நடைகள் குடிப்பதை தவிர்க்கவும் |

## குறுஞ்செய்தி

வரும் நாட்களில் இலேசானது முதல் கன மழை எதிர்பார்க்கப்படுவதால் வயல்களில் முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும்

**இயக்குநர்**

**இயக்குநர்**